# தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

## பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

**இந்நிறுவனத்தின் கீழ்க்காணும் ஒப்பந்த அடிப்படையிலான பதவிகளுக்கு தகுதி வாய்ந்த இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### 01. நிர்வாக அதிகாரி - JM 1.1 (தரம் II) - நிரந்தர அடிப்படையில்

**பணி விவரம் :** மனித வள முகாமைத்துவம், கொள்முதல், போக்குவரத்து, பராமரிப்பு மற்றும் சட்ட விவகாரங்கள் உள்ளிட்ட நிறுவனத்தின் பொதுநிர்வாகச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதில் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களுக்கு உதவுதல்.

**தகுதிகள் : வெளியக விண்ணப்பதாரர்களுக்கு**

மனிதவள முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் / அரச நிர்வாகம் / பொது முகாமைத்துவம் வணிகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய ஏனைய பாடத்துறையில் இளங்கலை பட்டம் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (கீழ்க்காணும் 1 அல்லது 2 இல் ஏதேனும் ஒன்று):**

01. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளியக விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்.
02. பதவிக்குரிய பொருத்தமான விடயப் பரப்பில், முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA 1.1) தரம் II பதவியில் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை அனுபவம் இருத்தல்.

**சம்பள அளவு : JM 1.1 - [. ரூ72,650-10 x 1,360-18 x 2,040 122,970/-]**

(ஆரம்பத்தில் ரூ. 65,633/- மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளுக்கும் உரிமை உண்டு)

**வயது எல்லை :** விண்ணப்பதாரர் குறைந்தது 22 வயது நிரம்பியவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**நியமன நடைமுறை :** எழுத்து போட்டித் தேர்வு மற்றும்/ அல்லது தொழில்முறை நேர்முகத் தேர்வு குழுவினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

### 2. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) MA 1.1 (தரம் III) நிரந்தர அடிப்படையில்

**தகுதிகள் : வெளியக விண்ணப்பதாரர்களுக்கு**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவற்றில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல். மற்றும்

க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் பொதுப் பரீட்சையைத் தவிர மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு :**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவற்றில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல். மற்றும் ஆரம்ப நிலை - திறன் சார், ஆரம்ப நிலை -பகுதி திறன் சார் அல்லது, ஆரம்ப நிலை - திறன் சாரா ஊழியர் வகையின் கீழ் நிரந்தரப் பதவியில் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை அனுபவம் இருத்தல்.

**சம்பள அளவு : MA 1.1 - [ரூ46,220-10x540-7x630-4x890-20x1,190=83,390/-]**

(ஆரம்பத்தில் ரூ. 43,312/- மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளுக்கும் உரிமை உண்டு.)

**வயது எல்லை :** விண்ணப்பதாரர் குறைந்தது 18 வயது நிரம்பியவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**நியமன நடைமுறை :** எழுத்து போட்டித் தேர்வு மற்றும்/ அல்லது தொழில்முறை நேர்முகத் தேர்வு குழுவினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

### 3. ஓட்டுநர் பதவி - PL3 (தரம் III) - நிரந்தரம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் (குறிப்பாக கொழும்பு மற்றும் பொகவந்தலாவை பகுதிகளுக்கு)

**தகுதிகள் : வெளியக விண்ணப்பதாரர்களுக்கு**

க.பொ.த. (சாதாரண தர பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல், செல்லுபடியாகும் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருத்தல் மற்றும் அவ்வுரிமத்தைப் பெற்றதன் பின்னர் மூன்று (03) ஆண்டுகள் சாரதி அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

செல்லுபடியான கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருத்தல் மற்றும் அவ்வுரிமத்தைப் பெற்றதன் பின்னர் மூன்று (03) ஆண்டுகள் சாரதி சேவை அனுபவம் பெற்றிருத்தல். மேலும், ஆரம்ப நிலை -பகுதி திறன் சார் அல்லது, ஆரம்ப நிலை - திறன் சாரா நிரந்தர பதவியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை அனுபவம் இருத்தல்.

**சம்பள அளவு : PL3-. [ரூ 43,280-10x490-10x540-10x590-12x630=67,040/-]**

(ஆரம்பத்தில் ரூ. 40,834/- மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளுக்கும் உரிமை உண்டு.)

**வயது எல்லை :** விண்ணப்பதாரர் குறைந்தது 18 வயது நிரம்பியவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**நியமன நடைமுறை :** நடைமுறை பரிசோதனை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

### 4. சமையல்காரர் பதவி - PL2 (தரம் III) - ஒப்பந்த அடிப்படையில்

**தகுதிகள் : வெளியக விண்ணப்பதாரர்களுக்கு**

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து உணவு மற்றும் பான தயாரிப்பு, சேவை தொடர்பில் தேசிய தொழில்தகைமை (NVQ) நிலை 2 இற்குக் குறையாத சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளியக விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு : PL2 - . [ரூ 42,300-10x490-10x540-10x590-12x630=66,060/-]**

(ஆரம்பத்தில் ரூ. 40,008/- மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளுக்கும் உரிமை உண்டு)

**வயது எல்லை :** விண்ணப்பதாரர் குறைந்தது 18 வயது நிரம்பியவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**நியமன நடைமுறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

### 5. விடுதி உதவியாளர் பதவி - PL3 (தரம் III) - ஒப்பந்த அடிப்படையில்

**தகுதிகள் : வெளியக விண்ணப்பதாரர்களுக்கு :**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு தோற்றியிருக்க வேண்டும்.

**சம்பள அளவு : PL1-. [ரூ. 40,500-10x450-10x490-7x540-15x590 = 62,530/-]**

(ஆரம்பத்தில் ரூ. 38,488/- மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளுக்கும் உரிமை உண்டு)

**வயது எல்லை :** விண்ணப்பதாரர் குறைந்தது 18 வயது நிரம்பியவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**நியமன நடைமுறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

### 6.பூங்கா உதவியாளர் பதவி - PL 1 (III வகுப்பு) - ஒப்பந்த அடிப்படையில்

**தகுதி : வெளியக விண்ணப்பதாரர்களுக்கு :** க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு தோற்றியிருக்க வேண்டும்.

**சம்பள அளவு : PL1-. [ரூ. 40,500-10x450-10x490-7x540-15x590=62,530/-]**

(ஆரம்பத்தில் ரூ. 38,488/- மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளுக்கும் உரிமை உண்டு.)

**வயது எல்லை :** விண்ணப்பதாரர் குறைந்தது 18 வயது நிரம்பியவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

**நியமன நடைமுறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம்.

**விண்ணப்பிக்கும் முறை** : உங்கள் விரிவான சுயவிவரக் குறிப்பை, உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன், சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து, கீழ்க்காணும் முகவரிக்கு 2026 ஜுன் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அரசத் துறையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள், அவர்களது சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், கடித உறையின் மேல் இடது மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். முழுமையற்ற மற்றும் காலதாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்தச் சூழ்நிலையிலும் பரிசீலிக்கப்படமாட்டாது.

**குறிப்பு:**

- முழுமையான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே எழுத்து மூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது நேர்முகப் பரீட்சைக்கு தோற்றத் தகுதி பெறுவர்.
- இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பு www.nipm.gov.lk இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**
**எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை, அத்துருகிரிய**
**தொலைபேசி: 011-2770232**